செ.வெ.எண்:40 நாள்: 19.11.2018

## நாகப்பட்டினம் மாவட்டம்

## “கஜா” புயலின்போது ஏற்பட்ட சேதங்களை சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் “கஜா” புயலின்போது ஏற்பட்ட சேதங்களை சீரமைக்கும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பூண்டி மேற்கு கிராமத்தில் புயலால் பாதிக்கப்பட்டு, தனியார் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு தெரிவித்ததாவது,

“நாகப்பட்டினம் மாவட்டத்தில் “கஜா” புயலால் ஏற்பட்ட சேதங்களை அகற்றும் பணிகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. மேலும் புயலினால் பாதுகாப்பு காரணங்களுக்காக நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்கள் அனைவரும் தங்கள் இல்லத்திற்கு திரும்பி விட்டார்கள்.

புயலினால் சாலைகளில் முறிந்து விழுந்துள்ள மரங்கள் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றது. சீரான மின்விநியோகம் கொடுப்பதற்காக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பணிகளை விரைந்து முடிக்க அனைத்துதுறை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள 78 மருத்துவ குழுக்களில் 14137 நபர்கள் சிகிச்சை பெற்றனர். தேசிய பேரிடர் மேலாண்மை படையிலிருந்து சிறப்பு பயிற்சி பெற்ற 102 வீரர்கள் 4 குழுக்களாக மீட்புப் பணிக்குத் தேவையான நவீன உபகரணங்களுடன் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரையில் புயிலினால் சேதமடைந்த 2,32,018 மரங்களில் 1,50,811 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. புயிலினால் சேதமடைந்த 18,000 மின்கம்பங்களில் 9,655 மின்கம்பங்கள் சரிசெய்யப்பட்டுள்ளன. புயிலினால் சேதமடைந்த 520 மின் மாற்றிகளில் 217 மின் மாற்றிகள் சரிசெய்யப்பட்டுள்ளன. இதுவரையில் 3000 ஹெக்டேர் தென்னை மரங்களும், 844 ஹெக்டேர் மாமரங்களும், 240 ஹெக்டேர் வாழைமரங்களும், 51 ஹெக்டேர் முந்திரி மரங்களும், 253 ஹெக்டேர் காய்கறி தோட்டங்களும் சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளன.” என தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பையும், அடிப்படைத் தேவைகளையும் உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்க கூடிய கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது. பொது மக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04365-251992 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**